මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/RDS/106/07/04
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016.12.30

**தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை இல: 04/2016**

அமைச்சின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,
பிரதேச செயலாளர்கள் யாவருக்கும்

**திடீர் அனர்த்த நிலைமைகளின்போது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையில் மரணிக்கின்ற மீனவர்களுக்கான நட்டஈட்டை வழங்குவது தொடர்பான அறிவுரைகள்**

திடீர் அனர்த்த நிலைமைகளின் போது அனர்த்த அபாயத்தைக் குறைப்பதற்காக மீனவ சமூகத்திற்கான காப்புறுதித் திட்டமொன்றை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன்கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் அனர்த்தத்திற்குள்ளான மீனவர்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

02. அதன் பிரகாரம் மீன்பிடி மற்றும் நீரியியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மீனவரொருவர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது கடலில் ஏற்படுகின்ற விபத்தொன்றின்போது ஏற்படுகின்ற உயிர் ஆபத்தின் பொருட்டு, 1 மில்லியன் ரூபா வரையான நட்டஈட்டுத் தொகையொன்றை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. அதேபோன்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது விபத்திற்குள்ளான மீனவர்களைத் தேடுதல், மீட்டெடுத்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான செலவுகளும் உள்ளடக்கப்படுகின்றது.

**03. நட்டஈடு வழங்குவதற்காகப் பின்பற்றவேண்டிய நடைமுறைகள்**

**(I) உயிர் ஆபத்துக்காக நட்டஈடு வழங்குதல்**

நட்டஈடு வழங்குவதற்காக விபத்திற்குள்ளான மீனவருக்குரித்தான பிரதேச செயலக பிரிவுக்குப் பொறுப்பான மீன்பிடி உதவிப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் குறித்த தகவல்களை பிரதேச செயலாளரினால் மீன்பிடித் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். மீன்பிடித் திணைக்களத்தினால் தொடர்புடைய காணாமல் போதல் அல்லது மரணமடைதல் ஆகியவற்றை உறுதிசெய்துகொண்டதன் பின்னர் அதுபற்றி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு அறிவித்ததன் பின்னர் நட்டஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(II) உலர் உணவு வழங்குதல்**

திடீர் அனர்த்த நிலைமையின் காரணமாக கடலில் காணாமல் போகின்ற மற்றும் மரணிக்கின்ற மீனவர்களின் குடும்பங்களில் தங்கியிருப்போருக்கு சுமார் 3 மாத காலம்

வரை உலர் உணவுகளை வழங்க முடியும். அதற்காக தொடர்புடைய பிரதேச செயலாளரினால் அவ்வாறு காணாமல் போன மீனவர்கள் பற்றிய விபரத்தை மீன்பிடி உதவிப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் மாவட்ட செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் பிரதேச செயலாளரினால் உலர் உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் 3 மாத காலப்பகுதிக்குள் மீனவர்கள் மீண்டும் திரும்பி வருதல் அல்லது குடும்பத்தில் தங்கியிருப்போருக்கான வருமான வழியொன்றை ஏற்பாடு செய்திருத்தல் போன்ற விடயங்களைக் கவனத்திற்கொண்டு உலர் உணவு வழங்குவதனை நிறுத்துதல் வேண்டும்.

| | ரூபா |
|---|---|
| தனிநபர் ஒருவருக்கு | 700 |
| 2 உறுப்பினர்களைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு | 900 |
| 3 உறுப்பினர்களைக்கொகண்ட குடும்பம் ஒன்றிற்கு | 1,100 |
| 4 உறுப்பினர்களைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு | 1,300 |
| 5 உறுப்பினர்களைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு | 1,500 |

உலர் உணவு வழங்குவதற்காக பலநோக்கு கூட்டுறவு மற்றும் சதொச (கூ.மொ.வி) விற்பனை நிலையங்களின் மூலம் நேரடியாகவும், அதற்கு மேலதிகமாக பெறுகை வழிகாட்டலின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டு வெளிவாரியான வழங்குநர்களிடமிருந்தும் கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும்.

04. நிதியமைச்சின் மூலம் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள தேசிய வரவு செலவுதிட்ட சுற்றறிக்கை இலக்கம் 152(I), 152(II) மற்றும் 152(III) ஆகியவற்றை இத்துடன் இரத்துச் செய்து தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 4/2016 வெளியிடப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த சுற்றறிக்கை 2017.01.01 ஆம் திகதி முதல் செயன்வலுப்பெறும்.

05. இந்த சுற்றறிக்கை பற்றி ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படுமானால் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் (தொலைபேசி இல: 011-2484665) விசாரித்தல் வேண்டும்.

**ஒப்பம்/ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்
5. மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்
6. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்
7. சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர்
8. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்
9. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவர்
10. கணக்காய்வாளர் அதிபதி

} தொடர்புடைய அலுவலர்களுக்குத் தேவையான அறிவுருத்தல்களை வழங்குவதற்காக